செ.வெ.எண்: 893/2016 நாள்: 20.12.2016

# பத்திரிகை செய்தி

மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ அவர்கள் தலைமையில், தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம், கன்னியாகுமரி முதல் களியக்காவிளை வரையிலான தேசிய நெடுஞ்சாலை நான்குவழிச்சாலை அமைக்கும் பொருட்டு தேசிய நெடுஞ்சாலைச் சட்டம் 1956 பிரிவு 3 (G) (3) ன்படியான விசாரணை விளவங்கோடு தனி வட்டாட்சியர் (நில எடுப்பு - தேசிய நெடுஞ்சாலை) அலுவலகத்தில் வைத்து இன்று (20.12.2016) நடைபெற்றது.

தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூலம் கன்னியாகுமரி முதல் களியக்காவிளை வரையிலான தேசிய நெடுஞ்சாலை நான்குவழிச்சாலை அமைக்கும் பொருட்டு நில எடுப்பு செய்யப்பட்ட நிலங்களில் விளவங்கோடு வட்டம், நட்டாலம் பி கிராமத்தில் நில எடுப்பு செய்யப்பட்ட நிலங்களுக்கான நில உரிமையாளர்களின் உரிமையினை நிலை நாட்டும் பொருட்டு தேசிய நெடுஞ்சாலைச் சட்டம் 1956 பிரிவு 3 (G) (3) ன்படியான விசாரணை விளவங்கோடு தனி வட்டாட்சியர் (நில எடுப்பு — தேசிய நெடுஞ்சாலை) அலுவலகத்தில் வைத்து கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சோ. இளங்கோ அவர்களால் இன்று நடத்தப்பட்டது.

இந்த விசாரணையின் போது நில எடுப்பு செய்யப்பட்ட நிலத்தின் உரிமையாளர்கள் சுமார் 200 க்கும் அதிகமான நபர்கள் கலந்து கொண்டு தங்களது விருப்பத்தினை தெரிவித்துக் கொண்டு அவர்களுக்குண்டான நில உரிமைக்கான ஆவண நகல்களை சமர்ப்பித்தார்கள் என மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.